**செய்தி வெளியீடு எண்: 02/2024** **நாள்: 02.01.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டு பிரிவிற்கு இரண்டு சிறப்பு விருதுகள்**

உலக மனிதவள மேம்பாட்டு கூட்டமைப்பு நடத்திய 18-வது தமிழ்நாட்டில் மனிதவள மேம்பாட்டுத்துறை பிராண்ட் விருதுகளில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த பணியமர்த்தல் பிராண்ட் மற்றும் மனிதவளத்திற்கான சிறந்த பங்களிப்புகள் என்ற பிரிவில் இரண்டு விருதுகளை பெற்றுள்ளது.

இந்த விருதுகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக நிதி இயக்குநர் டாக்டர் பிரசன்ன குமார் ஆச்சார்யா பெற்றுக்கொண்டார். அவர்களுடன் கூடுதல் பொது மேலாளர் T.P.வினோத் குமார், (மனித வளம்), மேலாளர் R.G.ரஞ்சித், (மனித வளம்), மற்றும் துணை மேலாளர் S.ரகுராமன், (மனித வளம்), உடன் இருந்தனர்.

அமெரிக்கா பெர்க்ஷயர் மீடியா எல்எல்சி, நகர்ப்புற போக்குவரத்துத் துறையில் மனிதவள சிறந்த நடைமுறைகளில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு "சிறந்த மனித வளத்துறை கையாளுதல் மற்றும் மனிதவள நடைமுறைகளை வளர்ப்பதில் முதன்மையான மெட்ரோ இரயில் சேவைகள்' என்ற விருது பெறப்பட்டது.

இந்த விருதுகள் சென்னை மெட்ரோ இரயிலின் மனிதவளத்துறையின் சாதனையைக் குறிக்கின்றன, நாட்டின் முன்னணி நிறுவன பிராண்ட் மற்றும் மனிதவளத் துறையின் அர்ப்பணிப்பைப் பாராட்டுகிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**